கனம் தலைமைக் குற்றவியல் நீதிமன்றம் / சிறப்பு நீதிபதி அவர்களின் மேலான...

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8167237

1. District : மாவட்டம் இராமநாதபுரம் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு | FIR No.: மு.த.அ. எண் 12/2024 | Date: நாள் 14-6-2024

2. (i) Act சட்டம்: 7 of PC Act 1988 as | Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Amended in 2018. | Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 13-06-24 | Date from : நாள் முதல் மாலை 18.30 மணி | Date to : நாள் வரை இரவு 23.30 வரை.
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14-06-24 | Time : நேரம் அதிகாலை 02.30 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 40கி.மீ மேற்கில்.
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி கோட்டப் பொறியாளர் அலுவலகம், நபார்டு மற்றும் கிராம சாலைகள் பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.ம.இராமச்சந்திரன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : நாட்டினம் இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் DSP | (g) Address : முகவரி O/o Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, Ramanathapuram District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   - எதிரிகள் விபரங்கள் கலம் 12ல் தெரிவிக்கப்பட்டுள்ளது -

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

எதிரியின விபரம்:

1. திரு.சு.சுரேஷபாபு, கோட்டககணககர், நபார்டு மற்றும் கிராமச சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்
2. திரு.து.ஹரிஹரன், வயது 55/2024 த/பெ துளசிராம், தற்காலிக பணியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.
3. திரு.த.சதீஸ், இளநிலை உதவியாளர், நபாரடு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்.
4. திரு.வி.அருளானநதம், இளநிலை உதவியாளர அலுவலக கணகாணிப்பாளர், நபாரடு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம்

சமாப்பிக்கிறேன் – இன்று 14.06.2024 ஆம்தேதி அதிகாலை 02.30 மணிக்கு இராமநாதபுரம் ஊழல தடுப்பு மற்றும் கணகாணிப்புப்பிரிவு காவல் துணை கணகாணிப்பாளர திரு.மு.இராமசசநதிரன அவரகள 13.06.2024 ம தேதி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ....................... Rank ....................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ....................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14/06/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

14-06-2023 - 0500 hrs.

Name: பெயர் எம் ரமேஷ்
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண்
உதவி ..., இராமநாதபுரம்.

**இராமநாதபுரம் ஊ.த.க.பிரிவு குற்ற எண் 12/2024 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 முதல் தகவல் அறிக்கையின தொடர்ச்சி**

மாலை 18.30 மணி முதல் இரவு 23.30 மணிவரை இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நபார்டு மற்றும் கிராமச சாலைகள், கோட்டபபொறியாளர அலுவலகத்தில் நடத்தபபட்ட திடீர சோதனை சமபந்தமான அறிக்கை, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம், கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூபாய் 1,38,500/- மற்றும் கைப்பற்றப்பட்ட ஆவணங்களுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண் 12/2024 பிரிவு 7 ஊழல் தடுப்புச் (திருத்தம்) சட்டம் 2018 படி வழக்கு பதிவு செய்தேன். வாதியின் புகார் பினவருமாறு, அனுபபுநர திரு.மு.இராமசசநதிரன, காவல துணை கணகாணிபபாளர், ஊழல் தடுபபு மற்றும கணகாணிபபுபபிரிவு இராமநாதபுரம். பெறுநர திரு.எம்.குமரேசன, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கணகாணிபபுபபிரிவு, இராமநாதபுரம். அய்யா, பொருள்: திடீர சோதனை - 13.06.2024ம் தேதி மாலை 18.30 மணிமுதல இரவு 23.30 மணிவரை இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நபார்டு மற்றும் கிராமச சாலைகள், கோட்டபபொறியாளர அலுவலகத்தில் திடீர சோதனை நடததபபட்டது - மேல நடவடிக்கை எடுக்க கோருவது - தொடர்பாக. பாரவை: எனது திடீர சோதனை அறிக்கை, நாள 13.06.2024. இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கணகாணிபபுபபிரிவிறகு கிடைதத 13.06.2024 ஆமதேதியன்று இராமநாதபுரம் மாவட்ட பரமக்குடி நபார்டு மற்றும் கிராமச சாலைகள், கோட்டபபொறியாளர அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள மற்றும் அலுவலரகள அரசாங்கததின பலவேறு சேவைகளை வழங்குவதற்கு பொதுமக்கள் மற்றும் ஒப்பநததாரர்களிடமிருந்து தவறான வழியில லஞசமாகப் பணம் வாங்குவதாக இரகசிய தகவல் கிடைததின அடிபபடையில, 13.06.2024 ஆமதேதி மாலை 18.30 மணிககு செயல்முறை நடவடிக்கையில

குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் முன்னிலையில் இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், கோட்டப்பொறியாளர் அலுவலகம் சென்று அங்குள்ள அலுவலர்களிடம் அடையாள அட்டைகளை காண்பித்து திடீர் சோதனையின் விபரத்தைக் கூறி திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது இராமநாதபுரம் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் பரமக்குடி ஊராட்சி அலுவலகத்திற்கு மேற்கில் அமைந்துள்ளது. மேற்படி அலுவலகமானது வடக்கு நோக்கிய வாசல் கொண்டது. அதில் நுழைவாயில் இடதுபுறம் கோட்டக் கணக்கர் அறையும் அதனைத்தொடர்ந்து நிர்வாகப்பிரிவு அமைச்சுப்பணியாளர்கள் ஒரு பெரிய ஹாலும் அதில் வலது பக்கத்தில் கோட்டப் பொறியாளர் அறையும், அந்த ஹாலைத்தொடர்ந்து தெறகே தொழில் நுட்ப வரைவுப் பிரிவு அறையும் அமைந்துள்ளது. அந்த அலுவலகத்தை சுற்றிலும் அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் வெளியே செல்லாமலும் வெளியில் இருந்து யாரும் அலுவலகத்திற்குள் உள்ளே வராமல் இருக்கும் வண்ணம் கண்காணிக்க என்னுடன் வந்த போலீஸ் பார்ட்டியினரை நியமித்தேன். மேற்படி அலுவலர்கள் அலுவல்பணி பாதிக்கப்படாமல் மேற்கொண்ட சோதனையின் போது திரு.சு.சுரேஷ்பாபு, கோட்டக்கணக்கர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை அரசு சாட்சிகள் முன்னிலையில் முதலில் அவரிடம் தங்களது அறையில் ஏதேனும் பணம் ஏதும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது சட்டையின் இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூபாய் 10,000/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, எல்.ஐ.சி கட்டுவதற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால் மேற்படி விளக்கம் ஏற்புடையதல்ல என்று கூறி அரசு சாட்சிகள் முன்னிலையில் ரூ.10000/– கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடமிருந்த ரூ.210/– பற்றி என்னிடம் கேட்க, கைச்செலவிற்கு இருந்த பணம் என்று

கூறியதால் மேற்படி ரூ.210/– என்னிடம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, தொழில் நுட்ப வரைவுப் பிரிவு அறையில் இருந்த திரு.து.ஹரிஹரன், வயது 55/2024 த/பெ துளசிராம், தற்காலிக பணியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் என்பவரிடம் முதலில் அவரிடம் தங்களது அறையில் ஏதேனும் பணம் ஏதும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டினை சோதனை செய்ய அதில் 320/– இருந்தது பற்றி அரசு சாட்சிகள் முன்னிலையில் அவரிடம் கேட்க, அவரது சொந்த செலவுக்காக வைத்திருந்ததாக கூறியதால் மேற்படி பணம் ரூபாய் 320/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது இருக்கையின் பின்புறத்தில் பெஞ்சக்கு அடியில் இருந்த ஆவணங்களுக்கிடையே இருந்து சந்தேகமான முறையில் கைப்பற்றப்பட்ட ரூ.1,00,000/– குறித்து என்னிடம் கேட்க மேற்படி பணமானது கான்ட்டிராக்டர் இராமமூர்த்தி என்பவர் முதுகுளத்தூர், சிக்கல் ஹைலெவல் பிரிட்ஜ கட்டுவது சம்மந்தமாக கான்கிரிட் மிக்ஸ் மற்றும் ஸ்டீல் டெஸ்ட்க்காக ஹைவேஸ் ரிசர்ச் ஸ்டேசனில் இருந்து அறிக்கை பெறுவதற்காக அரசு கணக்கில் எஸ்.பி.ஐ வங்கியில் செலுத்துவதற்காக இன்று மாலை சுமார் 05.30 மணிக்கு என்னிடம் கொண்டு வந்து கொடுத்த பணம் என்று கூறினார். இது சம்மந்தமாக விசாரிக்க மேற்படி பணமானது கான்ட்டிராக்டர் இராமமூர்த்தி நேரடியாக வங்கியில் செலுத்த வேண்டுமென்றும் அதற்கான இ–சலான் மட்டும் இவ்வலுவலகத்தில் இருந்து தயார் செய்து அவருக்கு கொடுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க நான் வங்கியில் பணத்தை செலுத்தி விட்டு மீதி பணத்தை திரும்ப ஒப்படைப்பதாக கூறியதின் பேரில் அவர் என்னிடம்

ரூ.1,00,000/– கொடுத்து விட்டுச் சென்றார். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரை கண்டதும் பயந்து கொண்டு நான் மேற்படி பணத்தை டிராயரில் இருந்து எடுத்து எனது பின்பக்கம் இருந்த பெஞ்சுக்கு அடியில் இருந்த ஆவணங்களுக்கிடையே ஒழித்து வைத்ததாக கூறினார். இது சம்மந்தமாக கான்டிராக்டர் இராமமூர்த்திக்கு ஒபன் ஸ்பீக்கரில் பேசசொன்னதில் இராமமூர்த்தி இன்று மாலை சுமார் 06.00 மணிக்கு சலான் கட்டுவதற்காக ரூ.1,00,000/– கொடுத்ததாக சொன்னார். மேற்படி விளக்கம் ஏற்புடையதல்ல எனக்கூறி ரூ.1,00,000/– அரசு சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது.

பின்னர், திரு.த.சதீஸ், இளநிலை உதவியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் என்பவரிடம் முதலில் அவரிடம் தங்களது அறையில் ஏதேனும் பணம் ஏதும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது பேண்டின் வலது பக்க முன்பாக்கெட்டில் ரூபாய் 3,000/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, இன்று அலுவலக ஆய்வுக்கு வந்திருக்கும் இளநிலை வரைவு அதிகாரி தங்குவதற்கு அலுவலக தூப்பிரண்டு திரு.அருளானந்தம் லாட்ஜில் ரூம் போட சொன்னதின் பேரில் நான் கொண்டு வந்தேன் என்று கூறியதால் மேற்படி நான் கூறிய விளக்கம் ஏற்புடையதல்ல என்று கூறி அரசு சாட்சிகள் முன்னிலையில் ரூ.3000/– கைப்பற்றப்பட்டது. மேலும் அவரிடமிருந்த ரூ.320/– பற்றி என்னிடம் கேட்க, கைச்செலவிற்கு இருந்த பணம் என்று கூறியதால் மேற்படி ரூ.320/– என்னிடம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது.

பின்னர், திரு.வி.அருளானந்தம், அலுவலக கண்காணிப்பாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் என்பவரிடம் முதலில் அவரிடம் தங்களது அறையில் ஏதேனும் பணம் ஏதும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது பேண்ட்டின் வலது பக்க முன்பாக்கெட்டில் ரூபாய் 5,000/– இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, இன்று திருநெல்வேலி கண்காணிப்பு பொறியாளர் அலுவலகத்தில் இருந்து அலுவலக ஆய்வுக்கு வந்திருக்கும் இளநிலை வரைவு அதிகாரி தங்குவதற்கு AD லாட்ஜில் ரூம் போட சொன்னதின் பேரில் அதற்கான செலவுக்கு வைத்திருந்த பணம் என்று கூறியதால் மேற்படி நான் கூறிய விளக்கம் ஏற்புடையதல்ல என்று கூறி அரசு சாட்சிகள் முன்னிலையில் ரூ.5000/– கைப்பற்றப்பட்டது. மேலும் அவரது சட்டையின் இடது பக்க பாக்கெட்டிலிருந்த ரூ.204/– பற்றி என்னிடம் கேட்க, கைச்செலவிற்கு இருந்த பணம் என்று கூறியதால் மேற்படி ரூ.204/– என்னிடம் திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக அவரை விசாரணை செய்து ஒரு வாக்குமூலம் பெறப்பட்டது.

மேலும், நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கோட்டக்கணக்கர் அவர்களால் ஆஜர்படுத்திய 1) 2024 ஆம் ஆண்டிற்கான வருகைப்பதிவேடு 2) 2024ஆம் ஆண்டிற்கான தாமதவருகைப்பதிவேடு மற்றும் கணக்கில் காட்ட இயலாத பணம் ரூபாய் 1,38,000/– ஆகியவை அரசு சாட்சிகள் முன்னிலையில் மேல் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இவ்வலுவலகத்தில் கொடிநாள் ரசீது கணக்குப்புத்தகம் மற்றும் பாக்கெட் மணி ரிஜிஸ்டர் ஆகியவை பராமரிக்கப்படுகின்றதா என கோட்டக்கணக்கரிடம் கேட்டதற்கு அவைகள் பராமரிக்கப்படவில்லை என விபரம் தெரிவித்தார். மேற்படி திடீர் சோதனை

13.06.2024ம் தேதி இரவு 18.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

எனவே, இந்த சோதனையின் அடிப்படையில் 1) திரு.சு.சுரேஷ்பாபு, கோட்டக் கணக்கர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் 2) திரு.து.ஹரிஹரன், வயது 55/2024 த/பெ துளசிராம், தற்காலிக பணியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் 3) திரு.த.சதீஸ், இளநிலை உதவியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் மற்றும் 4) திரு.வி.அருளானந்தம், இளநிலை உதவியாளர அலுவலக கண்காணிப்பாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள் கோட்டப்பொறியாளர் அலுவலகம், பரமக்குடி, இராமநாதபுரம் மாவட்டம் ஆகியோர்கள் முறைகேடான செயல்களில் ஈடுபட்டதற்கான முகாந்திரம் இருப்பது தெரிய வருகிறது.

எனவே, மேற்கண்ட இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், கோட்டப்பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு மேற்படி திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், கணக்கில் காட்ட இயலாத மொத்தப் பணம் ரூபாய் 1,38,000/–, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் மற்றும் திடீர் சோதனை சம்மந்தமான எனது அறிக்கை ஆகியவற்றை உடனடியாக வழக்கு பதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று தங்களிடம் ஒப்படைக்கிறேன். (ஒப்பம்) மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். 14.06.2024. மேலும், உயர் அதிகாரிகளின் வாய்மொழி ஒப்புதல் பெற்று மேற்படி எதிரிகள் மீது இன்று 14.06.2024ம் தேதி அதிகாலை 03.30 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு

மற்றும் கணகாணிப்புபபிரிவு குற்ற எண் 12/2023 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018ன்படி குற்ற வழக்கு பதிவு செய்யபபட்டது. பதிவு செய்யபபட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் சோதனையின் போது தயார் செய்யபபட்ட செயல்முறை நடவடிக்கையின் அசல், வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்/சிறப்பு நீதிபதி, இராமநாதபுரம் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கபபடுகிறது.

6.2024

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு
இராமநாதபுரம்.